குன்றக்குடி குமரன் நொண்டி நாடகம்

சுவடியியல் மற்றும் பதிப்பியல்
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப் பெற்றது.

பதிப்பு
ப. அனிதா

தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
மெரினா வளாகம், சென்னை - 600 005.

மே - 2006

குன்றக்குடி குமரன் நொண்டி நாடகம்

சுவடியியல் மற்றும் பதிப்பியல்
பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப்
பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப் பெற்றது.

பதிப்பு

ப. அனிதா

தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
மெரினா வளாகம், சென்னை - 600 005.

மே - 2006

முனைவர் **வீ. அரசு**
துறைத் தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.

மேற்பார்வையாளர் உறுதிமொழி

சென்னைப் பல்கலைக்கழக, சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் பேற்றிற்காக 2005 - 2006ஆம் கல்வியாண்டில் **குன்றக்குடி குமரன் நொண்டி நாடகம்** எனும் தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள இவ்வாய்வேடு என்னுடைய மேற்பார்வையின் கீழ் ஆய்வாளர் **ப. அனிதாவின்** சொந்த முயற்சியில் உருவாக்கப்பட்டுள்ளது என்று சான்று அளிக்கிறேன்.

இடம் :சென்னை - 5 மேற்பார்வையாளர்

நாள் :

(வீ. அரசு)

ப. அனிதா
தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.

ஆய்வாளர் உறுதிமொழி

சென்னைப் பல்கலைக்கழக, **சுவடியியல் மற்றும் பதிப்பியல்** பட்டயப் பேற்றிற்காக 2005 - 2006ஆம் கல்வியாண்டில் **குன்றக்குடி குமரன் நொண்டி நாடகம்** எனும் தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள இவ்வாய்வேடு எனது சொந்த முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

ஆய்வாளர்

இடம் : சென்னை - 5

நாள் :

(ப. அனிதா)

நன்றியுரை

சுவடியைப் பதிப்பிக்க வாய்ப்பளித்த சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு நன்றி உடையேன். சாலப் பரிந்தும் ஆக்கம் பெறச் செய்தும், பல துறைகள் அறிந்திடச் சாளரமாகவும், மூலவராகவும் நின்று வழிகாட்டும் தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் **பேரா. வீ. அரசு** அவர்களுக்கு எனது நன்றியைச் சமர்ப்பிக்கிறேன். என்னை ஊக்குவித்து இன்முகம் காட்டி உதவிகள் செய்த **முனைவர் ய. மணிகண்டன்** அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடியியலைக் கற்பித்த **பேரா. வீ. அரசு, முனைவர் ய. மணிகண்டன்** ஆகியோருக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன். பல்வேறு நேரங்களிலும், பல நிலைகளிலும் இவ்வாய்வுக்கு உதவிகள் செய்த நண்பர் **கண்ணியம் சதீஷ்** அவர்களுக்கும், கேட்ட பொழுதெல்லாம் சுவடியை எடுத்துத் தந்து உதவிய கீழ்த்திசைச் சுவடி நூலகத்தாருக்கும், எனது சுமையை ஏற்று என்னை வளரவிடும் எனது **தாய்** மற்றும் **என் சொந்தங்களுக்கும்**, எனது **தோழிகள்** மற்றும் **பாவா** அவர்களுக்கும், கணிப்பொறி அச்சு செய்து கொடுத்த **அன்றில் ஒளி அச்சு** நிறுவனத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ப. அனிதா

முன்னுரை

பள்ளு, குறவஞ்சி போன்ற இலக்கியங்கள் கி.பி.18 ஆம் நூற்றாண்டில் தோன்றியது. அந்த காலகட்டத்தில் தோன்றியது தான் நொண்டி நாடகம். குன்றக்குடி குமரன் நொண்டி நாடகத்தின் ஆசிரியர் வேத நாயக சாஸ்திரியார். தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என்றமூன்று பாகுபாடுகளைக் கொண்டுள்ளது.

"தெரிமாண் தமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்"

என பரிபாடல் திரட்டு மூவகைப் பாகுபாட்டைக் காட்டுகிறது.பிங்கல நிகண்டு.

" இசைத்தமிழ் இயற்றமிழ் நாடகத் தமிழென
வகைப்படச் சாற்றினர் வகையுணர்ந் தோரே"

என்று கூறுகிறது.

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம் "

எனவரும் தொல்காப்பிய நூற்பாவிலும் நாடகம் பற்றிய குறிப்பு உள்ளதை அறிய முடிகிறது.

சங்க இலக்கியங்களிலும் நாடகம் என்ற சொல் வந்துள்ளது. 'நாடக மகளிர் ஆடுகளத்தெடுத்த' (பெரும் பாணாற்றுப்படை 55 - 56) 'பாடல் ஓர்ந்தும் நாடகம் நயந்தும்' (பட்டினப் பாலை 113) போன்ற தொடர்கள் இதற்கு சான்றுகளாகும். 'நாடக மேத்தும் நாடகக் கணிகை' (சிலப்பதிகாரம்: பதிகம் 15); நாடகம் உருப்பசி நல்காளாகி

(சிலப்பதிகாரம் 6 : 12) 'நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர்' (மணிமேகலை 19 - 80) போன்ற தொடர்கள் சங்கம் மருவிய காலத்தில் நாடகம் விளங்கியமைக்கு சான்றுகளாகும்.

கி.பி 846 முதல் கி.பி. 1279 வரை தமிழகத்தை ஆண்ட சோழர்களின் ஆட்சிக் காலத்தில் நாடகக்கலை சிறப்புற்று விளங்கியது. இதை நாம் அவர்கள் காலத்து கல்வெட்டுகளால் அறிந்து கொள்ள முடிகிறது. ஆனால் கி.பி. 14 முதல் கி.பி. 16 ஆம் நூற்றாண்டு வரை மதுரை நாயக்கர் ஆட்சி தமிழகத்தில் நிலவிய காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் நாடகச் சுவைபட அமையவில்லை என்பர்.

கி.பி. 17,18 ஆம் நூற்றாண்டுகளில் பாமரர் நாடக இலக்கிய வடிவங்கள் தமிழகத்தில் குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் தோன்றியுள்ளன. அதற்கு அப்பகுதியில் நிலவிய அரசியல், சமூக, பொருளாதார பண்பாட்டுக் கூறுகள் காரணம் எனலாம்.

நொண்டி நாடக பின்னணி

கிறிஸ்தவ சமயம் தென்பாண்டி நாட்டில் ஆதிக்கம் பெற்றதால் இப்பகுதியை ஆண்டுவந்த நாயக்க மன்னர் களும், அவர்களின் பிரிதிநிதிகளாக ஆண்ட பாளையக் காரர்களுக்கும் பெரும் பொருள் இழப்பு ஏற்பட்டது. இதன் காரணமாக அவர்களின் சமயம் அழிந்து போகும் அபாயம் ஏற்பட்டது. இதனை தடுக்க நொண்டி நாடகங்களில் பாளையக்காரர்கள் போற்றிப் பாடப்பட்டுள்ளனர்.

கதைக்கரு

திருடன் ஒருவன் தவறான வழிகளில் சென்று அவனுடைய தவற்றுக்காக மாறுகால் மாறுகை துண்டிக்கப்

பட்டு பின்னர் இறைவனிடம் சென்று தொழுது அக்கை, கால்களை மீண்டும் பெறுவதாக அமைவதே நொண்டி நாடகம். தவறு செய்கிற ஒவ்வொருவரும் தங்கள் சமய கடவுளரிடம் சென்று, தவற்றை உணர்ந்து முறையிட்டால் பாவமன்னிப்பு உண்டு என்பதே நொண்டி நாடகப் புலவர்கள் உணர்த்தியிருக்கும் கருத்து ஆகும். பாவ மன்னிப்பு என்பதே நொண்டி நாடகத்தின் கதைக்கரு.

நொண்டி நாடக வடிவ வளர்ச்சி

சங்கம் மருவிய காலத்தில் எழுந்த சிலப்பதிகாரம், வேத்தியல், பொதுவியல் என்ற இருவகைக் கூத்துக்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இவை போன்று மேலும் சிலவற்றை அடியார்க்கு நல்லார் காட்டுகிறார். "நொண்டி நாடகம் என்பது வரிக்கூத்து தொண்ணூற்று மூன்றில் ஒன்றாகிய சிந்து என்பதின் பாலது ஆகும் என்ப. சிந்து என்பது பலதிறப்பட்டனவாம்.நொண்டிச் சிந்தும் அவற்றில் ஒன்றாகும்" என்பர் த.அ. அருணாசலம் பிள்ளை. எல்லா நொண்டி நாடகங்களிலும் நொண்டி தன் வரலாறு கூறும் பகுதி அமைந்துள்ளது. "சிந்து என்னும் சந்தக்கவியின் வகைகளில் இதுவும் ஒன்று. இதன் முதலடியில் மூன்று சீர்களும், ஒரு தனிச்சீரும், இரண்டாவது அடியில் நான்கு சீர்களுமாக மாறி மாறி வரும். நொண்டி நாடகம் பெரும்பாலும் இந்த யாப்பு வகையில் இயற்றப்படுவதால் இதற்கு நொண்டிச் சிந்து என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்" என்கிறது கலைக் களஞ்சியம். மேற்கூறியக் கருத்துகளின் படி த.அ. அருணாச்சலம் பிள்ளை கூறுவதுபோல் நொண்டி நாடகம் வரிக்கூத்து என்னும் கூத்து வகையின் வடிவ வளர்ச்சி எனக் கொள்ளலாம்.

நொண்டி நாடக இலக்கணம்

நொண்டி நாடகத்திற்கு உரிய இலக்கணம் பிரபந்த திரட்டு எனும் நூலில் மட்டும் காணப்படுகிறது.

"கலிப்பாவுந் தாழிசையும் நான்மணி மேற்காட்டல்

நலத்துறு சடானனம் நற்பா - வலிக்காவிற்

காலற்ற லேகாங்கிரி கலிவெண்பாச் சிந்தாய்க்

கோலுற்றார் நொண்டி யென்று கொண்டு".

என்று சடானனம், நொண்டி நாடகம் எனும் ஈர் இலக்கியங்களுக்கும் ஒரே நூற்பாவில் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. வன்செயல் காரணமாகத் தண்டிக்கப்பட்டு, ஒரு காலிழத்தலைக் கூறுவது கொங்கிரியாம். (எ.கா.- அங்கிரி ஒரு கால்). நொண்டி நாடகம் கலிவெண்பா, சிந்து ஆகிய யாப்புகளில் இயற்றப்படும் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

நொண்டி நாடகப் பாடல் வகைகள்

நொண்டி நாடகங்கள் விருத்தம்,தரு, சிந்து, ஆகிய பாடல் வகைகளில் அமைந்துள்ளன. பெரும்பான்மை நொண்டிச்சிந்தால் ஆக்கப்பட்டுள்ளன. சிறுபான்மை கலிப்பா, ஆனந்தக்களிப்பு, வெண்பா, ஏல், ஆசிரிய விருத்தம் ஆகியவற்றைக் கொண்டும் அமைந்துள்ளன. விருத்தம் இராகத்தில் அமைந்திருக்கிறது. ஆனால் தாளம் குறிப்பிடப்படவில்லை. தருவில் இராகமும் தாளமும் சேர்ந்து அமைந்திருக்கின்றன என்பர்.

நொண்டி நாடகம் பெயர்க் காரணம்

நொண்டி ஒருவன் தன் கடந்த கால வாழ்வினை இசைப் பாடலில் பாடி நடித்துக் காட்டுவதால் இது நொண்டி

நாடகம் எனப்பட்டது. நொண்டி நாடகத்தை ஆடுகிறவன் காலை நொண்டிக் கட்டிக் கொண்டு ஆடுவதால் இதனை ஒற்றைக் கால் நாடகம் என்றும் கூறுவார்கள். இந்த நாடகம் பெரும்பான்மையாக நொண்டி சிந்துவால் ஆக்கப்பட்டிருப்ப தாலும் நொண்டி நாடகம் என வழங்கப்பட்டிருக்கலாம். குன்றக்குடி குமரன் நொண்டி நாடகம் ஆனது தலத்தையும், தலத்து இறைவனையும் சேர்த்துப் பாடப்பட்டுள்ளது. தற்போது 32 நொண்டி நாடகங்களே காணக்கிடைக் கின்றன. குன்றக்குடி குமரன் நொண்டி நாடகம் சைவ சமயத்தைச் சார்ந்தது.

குன்றக்குடி குமரன் நொண்டி நாடகம்

குன்றக்குடி குமரன்
நொண்டி நாடகம்

1. பூதலம் பரவும் புல்லைப்
புகழ்குன்றக் குடியில் மேவும்
நீதருங் குமரர் மீதில்
நேசமா மகிழ்ந்து போற்றி
நாதருள் புகழ்ந்து நொண்டி
நாடகம் பாடி யாட
வேதமே பொருளாந் தொந்தி
விநாயகன் காப்ப தாமே

கருணையும் கணோதர புகழும்சீரும்
கதித்திடுங் குமரர் மீதில்
மருவுமுத் தமிழி னாலே
வாணி நாடகத்தைப் பாட
யுரிமையாச் சிவன்பங் காளன்
உமையும்நான் முகனு மாலு
முருகர்முத் தமிழி னாலே
முன்னின்று காப்ப தாமே.

கலியுகம் தன்னி லார்க்குங்
கைகண்ட தெய்வ மாகி
குரு குலந்தன்னிலென்ன
குமரனை மகிழ்ந்து போற்றி
யெலிமகா மேரைத் தாங்கி
யெடுப்பமென் றெண்ணி னாப்போல்
பொலிவு முத்தமிழாற் குத்தம்
பொறுத்தருள் புலவோர் தாமே.

தோடயம்

திமி திமி திமி திமி திமி திமி திமி திமி திமித் தோதிச் கெந்தரிதோ
தந்தனானா புல்வயலுயர் கல்வியாகிய செல........

றனவரு - குமரர்மேல் புகழ்ந்து பாடலை மகிழ்ந்து
நாடகம் புதல்வர்க்கோ திடவே
பொரியு மெள்ளரிசி யிளநீர் வடைகனி
அறியதாயம் கடலை யமுது செய்யும்
புனித கணபதி யடிவணங் குவனே
நிலத்தில் சுரரைவதைத்து அமரரை நிறுத்தியடியவர்

2. கருத்திலனு தினம் நினைத்தபடி யருள்
கொண்ட குமரனைப் பாடவே
நெடியமால் பனிகுடுமி யாமலை
நிதமுலாவிய மடவி யாகிய
நீண்ட புகழகி லாண்ட ...ளை புணி வென்றாகவே -
தந்தானனா
பெருகு பாக்கியந் தரு குன்றக்குடி ..
மருவுகாச்சியரு.....முகு கரமேல்
பெறிய நொண்டியே அறிய தண்டமிழால் விண்டோதவே
பேசுமா...... ணர வாச மேவு கேசரான தியாகராசர்
இருபேர் தாளினை நேசமாய் மறவேன்
கெம்பீரமாய் - தந்தானனா

......ரவு கோதண்ட றும்னூற் அண்ட நாயக
ராகிய வாலகுரு பர
வேலர் தமிழ்ச் சொல்லவே
சிங்காரமாய் - தந்தானனா

விருத்தம்

தாயகமாய் யிமையவர்கள் சிறைதான் மீட்டுத்
தஞ்சமென்று அடியவர்க்குத் தயவு கூர்ந்து
மாயனுக்கு மறுமகனாய் உதித்தோன் புல்லை
மருவு குன்றக் குடிக்குமரர் மகிமைபாட
நேயமுட னிருகாதில் குழைக ளாட
நெத்திதனில் திலகமும் வெண்ணீறுஞ் சாத்தி
தூயதொருக் களரிதனில் யொருகால் தூக்கி
தொந்த மென்று நொண்டிவந்து தோன்றினே

களரி சிந்து

3. தானத் தொந்தானத் தனனா -தந்த
தானத் தொந்தானத் தந்தத் -தானத்ததொந்தனனா
திருவளர் குன்றக் குடியில் கந்தன்
யீந்ததே சந்தனில் கண்கண்ட தெய்வமெனுங் கந்தன்
குருபற மூர்த்தி யெனுங் கந்தன் - யெங்கன்
குல தெய்வமாகி நின்று கலிதீர்க்குங் கந்தன்
தெய்வத்தின் மேலதிக கந்தன் - இஷ்ட
தேவதைகளெல்லாம் வந்து சேர்வை செய்யுங் கந்தன்
இவ்வுலககெல்லாந் துதிக்குங் கந்தன் - நிதம்
யேழையடியார்கள் வலத்தோளில் நிற்கும் கந்தன்

தொட்டவற் ...... கந்தன்
தோகைமயிலேறி விளையாடிவருங் கந்தன்
வட்டமிடுங் கோழிக் கொடி கந்தன் - குற
வள்ளி தெய்வயானை மணவாளனெனுங் கந்தன்
அம்பிகையாள் பயின்ற கந்தன் - துய்ய
அச்சுதன் மருக னெனும் பச்சமுள்ள கந்தன்

தும்பி முகனுக் கிளைய கந்தன் - அன்று
சூரனைச் சங்காரஞ் செய்த சுப்பிரமணியக் கந்தன்
கந்தனிரு பாதமும் போற்றி - முன்னை
கட்டியஞ் சொல்லி யிஷ்டமுடன் போற்றி
முந்த வேலாயுதமும் போற்றி - வளர்
முப்பத்து முக்கோடி தேவரையும் போற்றி

4\. .... கறைப்புலி யெனுஞ் சிங்கன்
எதுத்த மாத்தலர் தளத்த வென்ற கீர்த்தியுள்ளோன்
......நடியோன் புலிக் கொடியு முள்ளோன்
வட்ட நீலக்குடை பூச்சக்கிற வாளக்குடையு முள்ளோன்
யிட்டமுடி பாதத்தி லணிந்தோன் - வளர்
யிந்திரகுல மேவிளங்கிய சந்திர குலநேயன்
சிஷ்டபரிபாலக் கொடியூறன் - வளர்
தெட்சணா மூர்த்திப தந்தியானிப் பேனானே
சிங்கம னாதிப தியான் - பாரில்
செங்கோல் செலுத்த வந்தவங் காமதேனு
துங்கன் விசயநகுநாதன் - றாயத்
தொண்டமாறாதிபனைக் கொண்டாடிப் போற்றி

வேதமொ தவறாத நேயன் - நல்ல
விப்பிற குலாதிபரெனு முப்புரிநூல் மார்பன்
நாதமிகு சங்கீதசன் நாளும்
நல்லசிவதவமுடன் வல்லபங்கள் புரிவேன்
ஆகமப் புராணக் கலைக்கியானம் - மெல்லாம்
அன்புடனறிந் தருளுமின்ப அறிவாளர்
வாகணய கோதண்டறா(ரா)மன் - ஊரில்
மர்சனங் களனைவோரும் நேசமுடன் போற்றிக்
கொண்டு

ஏழு வீரகு நிர்த்தஞ் செய்யும் குன்று பதி
நெட்டுக்கால் கொண்ட நந்நாடு
வானாடர் புகழ்கின்ற நாடு - சங்க
மெல்லாரி புலிக்கொடி யுள்ள திருநாடு
வாடாத மாலையுள்ள நாடு - காலம்
வளர்பகல் பந்தமுகை மணிபெத்த நாடு

5. நாடரண வயலோ நாடு - புல்லை
நாட்டவரை யனுதினம் னாட்டமுடன் போற்றி
விந்தையாக நொண்டியாட வந்தேன் யெனனை
மிஞ்சியாடும் நொண்டிகளை நெஞ்சுகளைப் பிளப்பேன்
வந்தடுத்த நொண்டிகட்குச் சீஷன் - யெனனை
வணங்காத நொண்டிகட்கு மரபிலெ திறுனி
கூறுங் குரு மொழியே மறவேன் - யெங்கள்
குமரேசர் பாதத்தைக் கொண்டாடித் துதிப்பேன்.
வேறுமொரு தெய்வத்தை விரும்பேன் - பில்லி
மிண்டனுக்கு மிண்டனான சண்டப்பிர சண்டன்

கச்சைகட்டி மேல் விருது கட்டி - மெயிக்
கட்டுக்கூட்டு முட்டாய்ச் சல்லடமும் கரங்குருமால் கூட்டி
கச்சை நிறம் காலி நீலக் கூட்டி - யீஞ்சலுடன்
கங்கணமும் கட்டி சோமனேகாசம் போட்டு
பஞ்சவர்ணப் பாவாடை கட்டி-நொண்டி
பாடிக் கொண்டாடி கூத்தாடிக் கொள்வேனே - தாணதோம்
இனிதுடனூரும் பேரும் யெந்தன் வீரியத்தால் வாரும்
சனிபலன் பிடித்ததாலே தானங்கள் வரண்டவாறும்
வனிதையர் மருந்தால் சிக்கி வானபறி பிடித்த வயிறும்
கனிதுடன் னொருகால் போய்ப் பின் கால்
வளர்ந்தது சொல்வேனே

தரு – தந்தனான தானதனா

6. வெள்ளையூரு நாட்டுக்குள்ளே – நாங்கள்
மேல்வட்ட மாகவே னாளாவட்டத்தில்
உள்ளே குபேரக் குடியாக – ஊரிலுற்
றோங்கண் பேறும் பெற்றேன்.
அம்பலகாரப் புலிகள்ளபட மகந்தவிளக் குன்ற நாட்டுப்புலி
செம்பொன் வரை புயத்தான் – கெடி
சீரும் புலி பெற்ற தெள்ளியவான்
கலங்காப் புலிநானே – யிந்த
கள்ளர் பத்து கொருதுள்ளுக் குட்டியெங்கள்
குலங் கேழ்க்க யிந்திரகுலம்

கொட்ட மடக்கிய பட்டப்பெரு
விறாதி வீரனல்லவே – வெகு
மேஷ்ட்டிமை யாகிய தாஷ்டிகவான்
சேறுப்புலி வெள்ளையன் – யெங்கள்
சித்தப்ப னென்னை வளத்தப்பன் காண்
சிறுகுடி நாட்டுகள்ள ரென்னை
சேர்ந்தகிளைப் யென்னை சார்ந்தகிளை
நிரை மேலே நாட்டாரும் – யெங்கள்
ரெத்தக் கலப்பிலு தித்த சன்மகரு
மாத்தூற் நொண்டியும் தான் – மயித்த
கயித்தவன் காண் வன மயித்தின காண்
உருமாத்து சாத்தூறன் – நொண்டி
யுத்த சன மெல்லா மத்துமுண்டோ
திருச்செந்தூர் நொண்டியுந்தான் – பணம்

7. தேட்டில் மிகுத்த யென்பாட்ட னய்யா
பொருள் கன்னக்காரக் கண்டன் - குடி
போத்த லென்னுட கோத்திரங்காண்
யிளங்காளி யாளுக்குள்ளே - யெனக்
கிடுசோட்டான பேருமுண்டோ
குளங்கண்ட கொக்களிலே - சென்று
கூடும் வயிற் குருவியைப் போல் பத்தா
கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தை - நல்
லுபாயவித்தைக் இத்தர்வித்தை தொழில்கள்
பொய்யும் பிறட்டும் திருட்டுகளும் - அடி மூக்கிலே
புகுந்து செவியாலே பிறப்பிற காலங்களும்
கொடியால் புலிபாச்சல் - யெந்தன்
கோபுரமாருடர் தீபுறமும்
கத்தேன் கரை தெரிந்தேன் - என்
கருத்து சமத்தும் ஒருத்தருக் குண்டோ.
....

சித்தான் குட்டியல்ல சீறு புலிபெத்த தெள்ளியவான்
பார்த்தா பசுபோலே - பூந்து பாயும் பொழுது புலிபோலே
அசத்தான மெச்சினவன் - பார்க்கில் ஆயிரத்திலொரு
சேவகன் காண்,
திரிப்பேன் மணல்கயிறு - நான்
தீர்க்கமாய் ஆணைப் பெண்ணாக்கு விப்பேன்
நரிபோல அடிவயறு நனையாமல் குளிப்பாட்டும்
சேம நல்லோ தண்ணீருமேல் நடப்பேன் - சிவ
ஸ்த்தபமும் அக்கினித் தம்பம் செய்வேன்
வென்னீர் வரவழைப்பேன் - ஒரு
வேற்கட்டியே புள்வாய் கட்டுவேன்
கட்டாத்காளை யெல்லாம் - வனக்
காட்டி லடங்காத பொலி யெருது

8. அட்டாள தேச மெல்லாஞ் - சுத்தி
ஆண்மையும் வாண்மையும் மேன்மை பெத்தேன்
மயிலாடிக் கள்ளறிலே - நாமும்
மட்டுப்படாத மதப்புலி நான்
நயிலான திரேக மெல்லாம் - மெழு
குண்டே போல சொற்ன்ன கெண்டி போலே
நாளொருமட்ட மதாய் - மிக
ராகா வளத்தியாய் நான் வளந்தேன்
கீழ் வளவுதனில் - யென் - கிளைக்குள் மாமன்
மக்களையுந்தான்
கலியாணஞ் செய்துக் கொண்டு - நான்
காதலுடனந்தந்த மாதுடனே
சலியாமல் வாழ்ந்திருந்தேன். அப்போ

சாஸ்திரத் தால்மறை வேதியர்கள்
யேழரைநாட் டுச்சனிக் - கழிவு
யின்னமோ றாடொன்று சொன்னார்கள்
தேளான றாசிபலன் - யிப்போ
சென்மத்திலே வந்து வன்மிக்குறான்
னென்று கண்டாரறிந்து - சொன்னார்
யிது யெல்லாஞ் சிவன் செயலல்லா துண்டோ
அன்னாறைக் கெழுதினவன் - பின்
னழிச் செழுத் தில்லை யென்று
மனதைத் திடப்படுத்தி - நானும்
வந்து மனையாளுக் கந்தரங்தந்
....

9. தனதாகவே யுரைத்தேன் - அன்பு
சாலவே தெய்வங்தலங் களெல்லாஞ்
சேவித்து வாரனென்று - நீ
யிங்கேயிரு மென்று மங்கையுடன்
சொல்லியனுப்பிக் கொண்டு - கையினில்
சூண்டு வில்லுங் கவணேத்த தன்னறி குத்தீட்டியுடன்
கிரிச்சு மிதியடியும் - தொட்டு
கெம்பீரமாகவே அம்பு கொண்டு
பொன்னாத்தான் பொண்ணுக்குட்டி - நெடு
பூமன் பிரமிச்சி ஆசுடையான்
சின்னானும் சின்னமயன் யெங்கள்
கிட்ட முருகப்பன் கட்டையனும்
ஒரு சொட்டு ஆளாக வண்டி
யூருக்கு தேறப்ப தேருக்குப் போய்
திருநாளதிசயமும் பார்த்து
தேவி மீனாட்சி தெரிசனமும்

சொக்கேசர் சேருவையும் கண்டு
சூழ்ந்து மனத்துயர் தீர்ந்து விட்டேன்
தெற்கே திரும்புமப்போ - ஒரு
தேவடியா ளொரு தெய்வ ரம்பை
போலே யென் முன்னே நின்றாள் - யெங்கே
போகவந்தீ ரென்னதாப மென்றாள்
மாலை வளத்து விட்டாள் - நான்
வந்தாரை விட்டுப் பிரிந்து நின்றேன்
பதினொரு நாழிகை மேல் - சொக்கர்
பல்லாக்குச் சேருவையுஞ் செல்லக்கண்டு
அதிரூப வாணுதல்க்கு - நா
நாகஷ்த்த றொக்கமாகப் பத்துப் பொன்னும்

10. தாரா(றா)ளமாய்க் கொடுத்தேன் - அப்போ
 தய்யலு மென்மீதில் மய்யல் கொண்டாள்
மலர்க் மெத்தையின் மேல் - வைத்து
 லீலையிலே ஒரு காலை செய்தாள்
வெகு நேசமான பின்பு - அவள்
 மெத்த மயக்கமாய் நித்திரை கொண்டாள்
சொகுசா யுறங்கயிலே - பொடி
 தூவிக் கொண்டே னின்றுலாவிக் கொண்டேன்
தண்டையும் பாடகமும் - ரத்தின
 சதங்கை சிலம்பு கொலுசுகளும்
கொண்டையில் பொற்பணியும் - தங்கக்
 குச்சுடன் சுட்டியும் வச்சிரமும்
மாணிக்கம் பொன்னோலை - நீள்
 வாளியும் நீள் கணையாழி களும்

ஆணிப் பொன் மோதிரமும் - தங்க
 அட்டிகை சிந்தாக்குக் தட்டுவடம்
கண்ட சறியரைஞானி
 கைகூட்டுக் கோர்வை உள்கட்டுடன்
உண்டான தட்டுமுட்டுஞ் சேலை
 உள்ளதெல்லாம் மெள்ளக் கொள்ளையிட்டேன்
முருங்கை உருவிய கோலாக
 பொய் சூழலைச்சதி செய்திவிட்டேன்.
கருங்கங்குல் வேளையிலே - பரி(றி)காரம்
 காணாமல் மாறுபாசை
செயிதார்க்கும் வந்தனங் கற்பாரும் - கோட்டை
 கொத்தளங் கார்க்கின்ற பத்திரமும்

யிம்மட்டுந் தப்பி வைத்துக் கொண்டு
யேலெணியாகவே நூலேணிமேல்
மெள்ள யிறங்கி வந்து - வந்த
வேளை நவாப்புட பாளையத்தில்

11. கள்ளற் படாமற் சென்று - நான்
கட்டி வைத்தப்பண பொட்டணத்தை
வைக்கக் கரை மேட்டில் - கெல்லி
வைத்துப் போட்டு மன தச்சமன்றி
சய்யோக வேடிக்கையா - யிம்ம
முதலி சாயிபு பறங்கிகள் கும்பீனியும்
பெருவாரு கற்னாடாகப்
பேறணியும் யிறங்கிய தாணையும்
தஞ்சாவூர்ப் பாளையமும் - விண்ணில்
தாவும் பரிகளும் றாவுத்தரும்
துச்சாத வச்சித புயன் - றாயத்
தொண்டமான் சேனை யுத்தண்டங்களும்

சேதுபதி யுடையான் - நல்லத்
தேவண்ணஞ் சேனைப் பெருக்கங்களும்
காத வழியகலம் - வந்த
கம்பளப் பளையக் காரர்களும்
கருமேகஞ் சூழ்ந்தால் போல் - சுத்தி
கட்டிக் கொண்டா றத்து மட்டுக் கூட்டி
நெருங்கின வெட்டாச்சு - அப்போ
நீடிய கும்மந்தனைப் பிடித்து
தூக்கு மரந்தனிலே - போட்டு
தூக்கிவிட் டாருயிர் போக்கிவிட்டார்
மதுரையுங் கைவசமாய் - தேடி
வைத்த தெல்லாங் கைபற்றிக் கொண்டு

குதிரையுங் கால்பலமும் - வருங்
கும்பீனியும் கூடமும் முதலி
வடக்கே பயணம் வைத்தான் - தளம்
வாங்கு தப்போ நான் பாங்குடனே

12. கடக்கப் புதைத்து வைத்த - யெந்தன்
கைப்பொருளுங் கொண்டு செப்பமுடன்
பாளையம் போன பின்பு - சென்று.
பார்க்கக் கண்ட பாதி நேரத்திலே
தாளப் பதுங்கி நின்றேன் - ஒரு
தட்டா னெல்லான சயுந் தெட்டி தெட்டி
தேடின பொன்னை யெல்லாஞ் - சேமஞ்
சேர்த்துக் கொண்டு சமயம் பார்த்துக் கொண்டு
கூடி வழி நடந்து வந்தான் - துணை
கூச்சமில்லாமலே வாச்சுதென்று
பார்த்தேன் குறட்டுக் கல்போல் - புலி
பாச்சல் போலே ஒரு வீச்சு விட்டேன்
ஆர்த்தே யென விழுந்தான் - களை
யாச்சு தங்கே அவன் மூச்சையும் போய்

கிடந்தான் யெழும்பு முன்னே - நான்
கிட்டச் சென்றே பணப் பொட்டணத்தை
அடைந்தே யெடுத்துக் கொண்டேன் - எல்லாம்
பத்திக் கொண்டேனான் சுத்திக் கொண்டு
திருச்சினாப்பள்ளி யடைந்தேன் - அங்கே
செவ்வந்தி நாதரைச் சேருவை செய்தேன்
தரிச்சேன் பின் சீரங்கத்தில் - புகழ்(ள்)
தாவுந் திருவானைக் காவல் வந்தேன்

காளாங் திரி அண்ணாமலைத் - திருக்
காச்சியும் திருவாஞ்சிபுரம்
வேளூர் சிதம்பரமும் - திரு
வெண்ணை நல்லூரு திருக்கண்ணபுறம்
பொய்யாத கும்பகோணம் - திருப்
பூண்டிமம் மருதூர் மன்னார் கோவில்
அய்யாரு மாய்புறம் போற்றி - ஆமூறில்
வந்தே னானன் புடனே - தந்தனான தானனா

13. பொருந்திய திருவா ரூரில்
புண்ணிய தீர்த்த மாடி
திருந்தியே கோவிலுக் கேசி
தியாக ராசரைக் கொண்டேற்றி
அருந்தவ மறையோர் சைவ
ரனைவர் களுடனே சென்று
வருந்திய கற்பூர தீபம்
வணங்கினான் போற்றி னேனே.

சிந்து

தனனாத் தனதனனா தனனத் தன்னத் தனனத்தன
தனனானா தனனாத் தனனானா.

நின்றேன் சன்னதி முன்னே - அப்போ
லெட்சுமி சந்திரமதி பச்ச முத்தாளுங்
குன்றாத காமரற்றினந் - திருவாளூற்
கொன்றியுடனா கவல்லி பண்டித வல்லித்
தையல் முத்தி சிவகாமி - அதிரூப
சவுந்தரி மோகரத்தின சிவந்தி முத்து
துய்ய பரிமள மடந்தை - முத்தழகி
சூட்சி மீனாட்சி விசாலாட்சி

தெய்வானை மாரிமுத்து - முத்து
வல்லி சிவக் கொழுந்தன்ன முத்து
செண்பக வல்லி விவேகி - சிவ
மாலை கோதை ரத்தின
வேணிக்கத்தாள் - தேய மாணிக்கத்தாள்
மோகன மலையுடன் - பெண்க
ளெல்லா மோடியாயி மண்டபத்தில்
கூடி நின்றாள் கோகனகத்திலே யாயற்போல
திருவாரூர் கோனறி நின்று
நடனஞ் செய்தாள் மண்டபத்திலே

14. கண்டேன் மனதாச்சு - அவள்மேல்
கவனம் வைத்தேனா னவனியத்தி
கொண்டேன் திருமோகம் - திருவஞ்சிக்
கொடி போலே நின்று நடனஞ் செய்தாள்
கோவில் காலஞ் சென்று - மாதருட
னேடி வளவுதனில் நாடி வந்தாள்
தாவிய மோகத்தினால் - நானவள்
தபலை வாசல் போய் நிலையாக
நின்றேன் வெகுநேரம் - பாங்கிவந்து
நீரிங்கே வந்ததென்ன - கூறுமென்றாள்
நன்றாச்சென மகிழ்ந்து - உங்களுட
னாச்சியாற் மீதில் மயலாச்சுதிப்போ
யிவளுக்குப் பணைய மென்னா - சொல்லென்றேன்
யிரு நூறு பொன்னுடனே ஒரு சேலை

அவருட தாயுக்கஞ்சு பொன் - யிதுவெல்லாம்
அமத்திய பாங்கிக் கோராறு பொன்னும்
ஒரு முடிப்பாய்க் கொடுத்தால் - வீட்டினி
லுடனே கூட்டிப் போய் விடுவே னென்றாள்

அரிவையற் மயக்கத்தினால்– சொன்னதெல்லாம்
அள்ளி அள்ளிக் கொடுத்தேன் வெள்ளமின் னலாய்
கொண்டு போய் பணத்தை யெல்லாம் - அவளந்த
கோதை முன்னே வைத்து சேதி சொன்னாள்
கண்டு வெகு சந்தோஷமாய்ப் - பணத்தினில்
கனத்தவ னிவனென்று மனதி லெண்ணி

15. வந்தாள் தலைநாணி - வீட்டினில்
வாருங்க ளிங்கே நிற்கக் காரியமேன்
முந்தினாள் கனவில் கண்டபடி
முடிந்தது யெந்தன் துயர் விடிந்த தென்றாள்
பணமென்ன பாஷாணம் - உங்களுட
பட்சமொன்று யெனக் கொருலட்சம்
பொன்னல்லோ - குணமே
போதுமென்றாள் நான்கலா கொண்டேன்
விருந்தங்கே உண்டேன் நான்-மாப்பிள்ளை
வரிசை கொண்டு தாய்க்கிழவி வந்தாள் - தலைநாணி
மறைய நின்று வாய்ப்புடன் குனிந்து நின்று
தம்பி நீங்கள் வந்தீர்களென்றாள் - அத்தை
வந்ததே தென்றேன் - யிந்த
வனிதையர்க் கேற்ற மாப்பிள்ளை

யெங்கேவரப் போகுதென்று எண்ணியிருந்தேன்
யென் சிந்தையில் நினைந்த படியே - நீர்யிப்போ
தேடிய பொருள் கையில் சிக்கினாப் போல்
வந்தீரே துரையே - நீர்யிரு
மென்று மகளுக்கு சைகை சொல்லி
அகலப் போனாள் சந்தி ரோதைய முகத்தாள் - தூங்கு

மஞ்சந்தனி லென்னை யிருத்தியே பனிநீரால்
பரிமளந்தனை திமிர்ந்தாள்
சங்கீதம் பாடிக் கொண்டாள் மலர்சூடிக் கொண்டாள்
வரிசையதாய்ச் சுருளும் - யென்க்கவள்
மடித்துத் தந்தாள் வித்தை படித்துத் தந்தாள்
உடுத்திய கலை நெகிழ - தான் அமுற்
தங்களூறிய நிலை பார்த்தீரு மென்றாள்

16. கொடுத்தாள் கனியிதழை - கிளிபோல்
கொஞ்சி கொஞ்சி சரசங் களாடினாளே
அல்குலை நெறுடு, மென்றாள் - நடுவே
அழுத்தி விரலை மெள்ள சூழத்து மென்பாள்
புளகிய குமமுலை மேல் பொரும்
பொரும் விரலில் நெறுடுமென்பாள்
பந்தடித்தாப் போலே - அடிக்கடி
பதைத்து பதைத்து மெள்ள உதைத் தெளிந்தாள்
விந்தைய தாயணைந்தாள் - இடுப்பினில்
மெள்ள நகமூணிக் கிள்ளிக் கொள்வான்
கூந்தலும் விரிந்தசைய - முகத்தினில்
குருவேர்வையும் பொங்கக் கெருவிதழும்

சேர்ந்தொரு முத்தங் கொடுப்பாள் - யிருவிழி
சிவந்திட வேயிரு கதுப்பை மென்றே
களிபோல் சிவந்திருக்கும் - அவளுட
காதுக்குள் நாவை விட்டுலாவி விட்டேன்
பணிமொழி கொஞ்சிக் கொஞ்சி - யெமிடறினில்
பலுக்குவள் புக்குறலை கலுக்கு லென்பள்
பிடறியில் நகமழுந்த - விடுமென்று
பிணங்கிக் கொள்வாள் சத்தே சிணுங்கிக் கொள்வாள்

சடனவே முழங்கை உச்சிதனில் - தாடனஞ்
செய்து முகத்தரை போடுவளே
சும்பன வகைகள் செய்வாள் - திருகணி
சுத்துவது போலே யொரு வித்தை புரிவாள்

17. செம்பவள வடமசைய - கலீரென்று
செங்கை வளையுங் குலுங்கக் கொங்கைக் குலுங்க
மேலும் மேலும் மெத்தனவே - யென்னையவள்
மெச்சுவள் வினோதமென்பள் உச்சிதமென்பாள்
காலோடு காலுபின்னுவள் - யிதுவெகு
கடின மென்பள் புணர்ச்சியில் துடினமென்பாள்
மலையாளி சுறதம் போலே - யந்தன்
மார்க்கஞ் செய்தாளக்த மார்க்கமுடன்
கலைமான் போலே புணைவாள் - யிதுவெகு
காமப் பெருக்கம் ஒரு சாமமட்டும்
கொக்கோக மார்க்க மெல்லாம் - பாருடிக்
கூடினாள் ரதிக லீலையாடினாள்

மிக்காவில் விழியணங்கு - உடலி
லயங்கினேன் கிடந் தேங்கினனே
யென்னாசை நிமித்தியத்தால் - நாளொன்றுக்
கெழுபது கொடுத்தேன் வழுவாமல்
விண்ணாசை மையக் கிழவி - யெனக்கவள்
விருந்திட்டுப் பகைகாண மருந்து செய்தாள்
குட்டி குமிழ் நிலப்பனை வேர் - முதுறான
கூந்தலும் சித்தா முட்டி சீந்தியிலை

நெட்டிவிரை யெட்டிவிரையும் - பேய்ப் பீர்க்கி
நெல்லியிலை வில்லையிலை அல்லி அரிசு

முள்ளிவேர் முசு முசுக்கை - புத்து மேல்
முளைத்த கிலுகிலுப்பை களச்சியிலை

18. கள்ளிப்பால் வெள்ளருகுவேர் - பேய்த்
தரணி கத்திரி வழுதலையும்
சித்திரமூலம் சித்தாமணம் - செப்பு
நெருஞ்சி ஊமத்தை சிறு குறிஞ்சி
நல்ல பணமுறிஞ்சி - கத்தாழை
நிலம் புறண்டி ஆல்க்கிழ்க் கன்று
தலைசுரு நின்று சில்லி பல்லி
அறணையின் வால் முயல் குடல்
பக்கி முளிப்பச் சோந்தி - கொக்கு வயறு
சில்லி நிணமும்
கரும் பூனை கருநாயும் - சென்னாயுந்
தலை மண்டை சன்னா சிப்பல்
மூஞ்சூறு முகட்டெலித் தோல் - புடையன்
முணிக்கா லெலும்புடன் நணிக்காலும்
பூஞ்சோலை குயிலறக்கும் - மறவெட்டை
புடைய னடி வயிறு நெடு

மரையூன மடையான் - தவளைப்
பித்து ஆந்தை நிணம் வலதுகண்ணும்
தேரைப் புலிப்பாலும் - விடையான்
கோழி யெச்சம் கன்னியர்கள் மீதலமு மயிந் திரையும்
மாத விடாய் நரிக்கொழும்பு - கறடிமயில்
ஊக்குருவி நாக்கும் குரு குந்நதி மூக்குடனே

கரிச்சர முதுகெலும்பு - செம்போத்து
கழுத்து முசுரு முட்டை கெளுத்தி முள்ளு
நேரு விஷம் பாஷாணம் - செங்கோட்டை
நேர்வாளம் பச்சைநாவி கோறோசனை
முறிக்கிய வலம்புரிக்காய் திரைகடல்
முறையுடன் சித்தரத்தை யறிதாரம்

19. காவிக்கட்டி புனுகுசட்டம் - மயற்பொடி
கஸ்தூரி கல்லுமதம் கொத்த மல்லிகை
தாவிய காசுக்கட்டி ... காறஞ்
கடைக்கஞ்சா சாதி பத்திரிநெல்லி முள்ளி
சிறுதேக்கு காட்டெருமை - நெய்யும்
கொம்புத்தேன் துய்ய வெல்லமும்
சொல்லிய மனோச்சிலையுங் - கடுக்காய்
சுக்கு மயிறோ சனையும் மூக்காம்
வீனுங் காட்டினில் மூலிகையும் - சீவன்
வகை கடைச் சரக்கும் விருக னிடைப்படியே
கூட்டியே அம்மியரைத்து - யிளங்கன்று
தோழியந் தன்னிலூற நேர்முகமாய்
அஞ்சு நாளூற வைத்து - முலைப்பாலி
லரைத்து உண்டை பண்ணி உருச்சேத்து

வேசனங் கறிகளிலுஞ் - சோத்திலும்
வெத்திலை சுண்ணாம்பு தனில் வைத்து மடித்து
வறக் வகையில் நிமிர்ந்து - யெனக்கவள்
வருத்தம் புகட்டி விட்டாள் நானறிந்து விட்டேன்
மறக்கடக மூதேவி - யெனக்கவள்
மருந்திட்ட மயக்கத்தி லகப்பட்டு நான்

கதித்திடுங் கப்பலிலே - பாய்மரம்
காத்தினி லகப்பட்ட காக்கை போலே
மதித்திடும் வலையிற்குள்ளே - சிக்கிக் கொண்ட
மான்போலே கெண்டை மீன் போலே
யேவலுக் காளானேன் - யென் பணத்தை
யேச்சுப் பறிக்க யினி வாச்சுதென்று

20. கூவென்றாள் ரா(ற)த்திரியே - வீட்டினில்
கொள்ளை போச்சுதென்று அந்தகள்ளி யழுதாள்
பூட்டிய வுடமையெல்லாம் - அந்த வீட்டில்
புதைத்து வைத்தாள் மனம் பதைத்திடவே
மூட்டிய தாய்க்கிழவி - சுவரினில்
மோதிக் கொண்டாள் மனம் சோதிக்கவே
பொற்கொடி புலம்பி நின்றா - யெனக்கப்போ
பொருக்காமல் மன தொருக்காமல்
வற்கமிட்ட உடமையெல்லாம் - ஒட்டிரட்டி
யானான் வறப்பண்ணுகிறேன் நீ வருந்தாதே
இதுவோ சிலபாறம் -முத்துச்சுட்டிக்
கிட்டிப்பிறைக் இருநூறு கெட்டி விறாகன்

புதுக் சுட்டிக் கறுபது பொன் - அன்ன காப்பு
பொன்னோலை நாகவடம் முன்னூறு பொன்
முலைக்கச்சு நாற்பது பொன் - மாணிக்க
மூக்குத்திக் காரை சிந்தாக்கு மணி
அட்டிகை கண்டசரி - விரல்
கணையாழி கைவளை யொரு சாழிகை
பொன்னொட்டியாணம் - ரெட்டையம்
ஒரு துகையாகவே முன்னூறு பொன்

பாடகமாயிரம் பொன் - கொலுசுடன்

பழுதில்லாச் சிலம்புக்கு யெழுநூறு பொன்

ஆடகம் தண்டை சதங்கை - கெச்சை

முதலாக முன்னூறு பொன் சேகர(ற)மாய்

சேகர(ற)மாய் வெள்ளி நகைக்கைந் நூறுபொன் - சேலை வகை

வெங்கலத் தட்டுமுட்டு அடங்கலாக

21. உள்ள விலை யெழுநூறு பொன் - பெருந்துகை

ஒருமிக்கப் பார்க்கிலைய் யாயிரம் பொன்

உடனே கையில் கொடுத்தேன் - அசல் வீட்டில்

ஊட்டின விலைக்கென்று மடினம் பண்ணி

அடவுடன் வாங்கிவந்து - சிங்காரித்

தணிந்து கொண்டாள் மனந் தணிந்து கொண்டாள்

உடனாடு சத்துருவாய் - ஊனிருக்க

உயிர்தனை வாங்கிய வுண்மை போலே

குடப்பண முள்ளதெல்லாம் - மீன் தண்ணீர்

குடித்தாப் போலெல்லாம் பறித்துக் கொண்டாள்

அரிசிப் பிச்சையெடுத்து - நானினி

அருகங் கூட்டையினி லிரைத்தாப் போல்

கரி(றி)சனமாய்த் தேடி ஆடி

காத்தினில் பஞ்செனவே தூத்திவிட்டேன்

கையிப் பொருள் கரைந்த - பின்பு அவள்

முகம் கடுத்தாள் முகம் வெகு கெடுத்தாள்

தப்பறை காலத்திலேயே - யென்னை

அவள்கதி பண்ணினாள் யென்று மதிமயங்கி

அம்மா பேட்டைக்குப் போய் - ஒரு

செட்டியார் தெருக்கடை தாழ்வாரத்தில்

சும்மா படுத்திருத்தேன் - பதினெட்டு
சோத்தியத்தில் களவாடக் கச்சங் கட்டினேன்
மோசங்கள் வாராமல் - நின்றுவலப்பக்க
மூலையில் கன்னமிட்டு முளைத்துச் சென்றேன்
காசுப் பையினில் பணமும் - வெள்ளிக்
காசும் விறாகனும் ரூபாய்களும்

22. வேணதெல்லா மெடுத்து கட்டி - நானப்போ
விடியு முன்னே ஒரு நொடிதனிலே
நாண ......வந்தேன் .... கொண்டு போய்
நாரியற் கையில் கொடுத்தேன் வெகு வீறிய மதாய்
மேலு மென்னைக் கொண்டாடினாள் - அவளந்த
மின்னிருந்த விறகத்தில் வெகுமிச்ச மானாள்
பத்து நாள் சென்ற பின்பு - அந்த
பஞ்சமா பாதகத்தி தோதகஞ் செய்தாள்
தலையே வலிக்கு தென்றாள் - மூன்றுநாள்
தலையமுக்குவ குத்துவலி யஞ்சு நாளு
உலவிய பெரும்பாடு - கிறங்கி
உஷ்ண மிகுந்த தென்று தெட்டினாளே
அஷ்த ரொக்கம் தந்த பேரை - வீட்டினில்
அழைத்துக் கொண்டா ளென்னை முடுக்கிவிட்டாள்

சித்தப் பிரம்மை பிடித்தவர் போலே மனம்
திரும்பாமல் லலைகடல் துரும்பானேன்
வாழுகிற வீட்டினிலே - கடி நாய்
வளத்து விட்டது போலந்த கிழட்டு மட்டை
சூளைமுகக் குசவரைபோல் - போ வென்று
சொல்லாமல் போகச் சொல்லித்து சங்கட்டினாள்
நல்ல நல்ல பூவைக் கண்டால் - சற்றுநேரம்
நல்லோர் முடித்துக் கொள்வா ரல்லாமலே

மல்லிகைப் பூவதனைக் - கசக்கினால்
வாசமுண்டோ வெகு ஆசையென்னா
முகந்தனை முறியாமல் - கூடிய
முண்டை ...... னையான் முகந்துதியோ

23. கடனுடன் கொடுத்ததுண்டோ - வித்தாக
கால் கையிலே விக்காட்டி .... ரண
உடம்படிக்கையுமாச் சோயிவளுனக்
குத்தனமோ உங்களத்தை மகளோ
நீயார வளா ருசி நீக்கி
தொகுக்கவுந்தான் வெட்கமில்லையோ
வாயோ சலிக்கவந்தாய் - நீயென்ன
மாய்ப் பிள்ளையோ பிடித்த கால்பிள்ளையோ
அகத்தைக் காத்துக் கிடந்தாய் - பொட்டித்
தாலும் சவங்களாக் கிடப்பதென்ன
மதியாறி தப்பலாமோ - நீறிப்ப
வாத்த கஞ்சிக்கு மகள் நூற்ற கொட்டைக்குஞ்

சரியாச் சினியேது - போவென்று
சந்திதனில் தள்ளிவிட்டாள் மந்திமுகறி
பேடு விட்ட அன்னமானேன் - மீட்டு
பறந்திட்ட மான் போல் மதி மறந்தேன்.
கூடுவிட்ட குளவியை - போல நான்
குதிரை கொடுத்த சவுதாகிரி போல்
நன்மை செய்யக் கர்மமாச்சே - தன்னை
நம்பியேற் பூட்டுகின்ற நடத்தை போலக்
கணவிதிப் பயனேன் - துடைப்புண்
கடைதனில் காட்டுதற் கடலல்லவே
பிஞ்சுமதி நுதலாளை - நம்பினான்
பிள்ளையார் பண்ணப் பெருங் குரங்காச்சே

நெஞ்சிலொரு நினைவை - நானொன்று
நினைத்திடத் தெய்வமொன்று நினைத்திட்டுதே
விதிதனை யெவராலும் - பாரினில்
வெல்லப்போமோ யெழுத்தைத் தள்ளபோமோ

24. குதிரை பிடித்து வருவோமென்று வள ......
............சை நாடினேனே.

விருத்தம்

அன்னமின்ன நடையாள் தந்த
ஆசை யாக்ரியி னாலும்
பன்னுதாய்க் கிழவி செய்த
மருந்திட்ட மயக்கத் தாலும்
பொன்னெல்லாம் பறித்துக் கொண்டு
போவென்று மிரட்டி விட்டாள்
மன்னவன் புறவி கொண்டு
வருவதற் கேகி னேனே.

சிந்து

தினனா, தின, தினனா, தின, தினனா

சந்தலைத் திருக்காட்டுப் பள்ளி சென்று
தாருசமுட னறியலூர் கடந்தேன்
புந்திமகி ழாடபுறம் வாலி - கொண்டா
புறமும் கண்டேன், நா நறமுங் கண்டேன்

ஆற்காட்டுப் பெண்ணையாறு - வே..........
றாணைகுந்தி பட்டணத்துக் கப்பால் சென்றேன்
போற்கான செஞ்சி கடந்தேன் - டில்லி
போய்ப் புகுந்தேன் வெகு வாய்ப்புடனே

காஷதாரிகள் போலே - புல்லுக்கட்டு
கனத்த சுமையுங் கொண்டு மனத்திடமாய்
நேசமுடன் வருகையிலே - பொல்லாத
நிமித்தஞ் சொல்லு சமெந்த னிடதுபுறம்
யேகின ஊர்தனிலே - பெரியோ ரெல்லாம்
தங்களூரா மென்றெண்ணிக் கொண்டு நான் ஆவலுடன்
கோட்டைக்குள் போய்யளைப் போலாம்........ வருவந்து
....

25. செனபாச்சா அறமனையும் - பெருத்த
பருத்த முகப்புகளும் துறைத்தினமும்
காறிய .... ளும் ...பெறிய
காப்புலியர் வடுக கன்னடியரும்
பட்டாணி மார்பிலுக்கும் - பெரிய
பக்கு...... டனே லாக்கிறிகளும்
கட்டான சமத்துகளும் - வெள்ளித்
தடிகாரர்களும் நாலுவாசல் காரர்களும்
கடைத் தெருசிங்காரமும் - அப்போது
கண்டுமகிழ்ந்தே நயங்கொண்டு மிகுந்தேன்
சடக்குடனங்கி நிசாரும் - நூறுமுளத்
தலைப்பாகையுங் கட்டி மலைப்பாக
பட்டாகத்தியு மெடுத்து - இடுப்பினில்
படுக்கத் துப்பட்டியிடுக்கிக் கொண்டு
காட்டாறிக் கேடையமும் - நடுக்கவுட்டுக்
கட்டிக் கொண்டு சாதிரையும் கவ்ட்டிக் கொண்டு - நான்

பட்டரணி வேஷங் கொண்டேன் காலினில்
பாப்பாச்சி தொட்டு வெகு கோப்பாகவே
கொட்டாறத் தருகாலே - பெரிய
கூடாறக் கடை வீடோரத்திலே
சவ்வாசுகான் கோறி - அல்லிகான்
சாதிகான் சந்தலைகான் மோதினி கானும்
வீயேசி பாத்ருகான் - அசநல்லி
வீடே சாயவு ..... டியேசா
சா அத்திகானே தலிகான் - மதிமிய்யா
அவரேங்கு கானுடநில ரேங்குகான்
வந்தினி உச்சை .....ய்யாமீரு
சங்கும் முதுகானுடனே ரம்முதுகானும்
வெகுசனம் கூடியிருந்தார் - நானப்போ
வியப்புடனே நின்று லாபம் பண்ணினேன்
மகிழ்வுடன் பயிட்டோ வென்றார் - நானப்போ
.... ட்டுக் கொண்டிருந்தேன் துண்டெறிக்கமாய்

26. உக்காவுங் குடுகுடுக்குந் தந்தார். பின்னும்
..... டனே நிசம் புரிந்து கொண்டார்
மிக்கான வற்கவகையும் பொறியிலும்
மிகுந்த கிச்சடியிது விருந்து மிட்டார்
கூடிக் கொண்டருந்தி விட்டேன் - யெச்சியிலுங்
கூசாமல் நானிருந்து பேசாமலே
பாடித்தம்புரு மீட்டி - அவர் பதம்
படித்துக் கொண்டார் கையை நொடித்துக் கொண்டேன்.

அவர் சொல்லும் பாஷைக்கெல்லாம் - சகலமும்
அறிந்தவர் போல் தலை அசைத்துக் கொண்டு
கனமதமாயிருந்தேன் - யென்னையப்போ
கனமுள்ள மனிதனென் றேயிருந்தார்
யெல்ல வரும் படுத்த பின்பு - நடுநிசி
வேளையிருட்டுக் குள்ளே நானெழுந்திருந்து
கல்லடமுகருங் கரங்குங் - குல்லாவுந்
தரித்துக் கொண்டேன் மீசை திரித்துக் கொண்டேன்
சித்திர வித்திர மூலிகையும் - ஆளுருத்
தெரியாத்தி ... ங் குலிசங்களும்
குத்து வெட்டேறாத மருந்தும் - நா
னணிந்துக் கொண்டே னெவாய்த் தணிந்து கொண்டேன்
..........றே நய்யா காடரபிக் குதிரைகளும்
பந்தி பந்தியாய்க் கட்டி நிக்கும்

27. அச்சுறுட்று - தேடரபிக் குதிரைகளும்
படை வெட்டுக் தேசிகளு - மனு
வாசிகளும் மேகவற்ன்ன...
....ய்ய வெள்ளை நிறப்பறிகளும்
விந்தையாய் சாரிசாரியாகக் கூட்டி நிற்குஞ்
சாத ..... களைப் பார்த்திருந்து பாச்சாமிக
வேறும் பெரிய பாரிக் குதிரையி லோரத்தில்போய்
ஆவலுடன் பிடிப்பமென்று முன்கையி
லடவுடன் நெத்தி தன்னைத் தடவிக் கொண்டு
தாவுகவுனைத் திறந்தேன் அங்குவடி
தாளிட்டேன் கடிவாளமிட்டேன்
கழுத்துச் சங்கிலி விடுத்தேன் - பின்னங்கால்

கயிற்றை யவிழ்த்து மெள்ள மனத்திடமாய்
யேறியேன் குதிரை மேலே - யேற
வேத்தாளென் றனுமானித்தது யிருட்டுக்குள்ளே
சுத்தி வந்து சோணங்கி - னாய் போல
சுத்திச் சுத்திக் குலைத்தது பத்தியே
உங்களத்துக் காப்பிலியர் - சத்தங்
கேட்டு - உசும்பியே யெழுந்திருந்து
நாடி வந்தார் சக்கிலியர் - பறையர்
வந்தார் தீவட்டி சடுதியிலே கொண்டு
வந்தார் வெடு வெடென்றே
கொரடாவைக் காண மென்றார் - நானப்போ
...... குதிரை விட்டிறங்கி நான் மதிமறந்து
ஓடாமலே பதுங்கி - முழங்கா-
லுடைந்து சொ..... கல்லுத் தொட்டிதனில் புகுந்தேன்.

28. யிங்கே வந்து கண்டு கொள்வா.......
.....ங் கொண்டு மிரண்டு
நெல்லெடுத்த குழிதனிலே - நான் போய்
நெடு மூச்/ செறிந்துள்ளே நடக்கயிலே
செய்யானுங் குடகுண்ணியுங் - கடிக்கவே
செல்லு மொய்க்க தேள்கொட்ட உள்ளம் நடுங்க
அய்யோவெனத் துடித்தேன் - வேர்வையில்
அணிந்த திலகமெல்லா மழிந்து தப்போ
செறக்குள்ள குளிசங்களும் அவிழ்ந் தங்கே
சிதறிவிட்டது மனம் பதறி விட்டேன்
மூர்க்கமுள்ள பரியைக் கண்டார் - சுத்திவந்து
முடிவளைந் தென்னையுந் தேடி வந்து

மத்தாப்பு வெளிச்சத்திலே - யெந்தன் முகம்
வாட்டங் கண்டார் நிழலாட்டத்திலே
.......க் கண்டுபிடித்தார் பின் கட்டாய்
யிறுக்கிக் கொண்டார் மெத்த வுறுக்கிக் கொண்டார்
பாருவில் வடுக செல்லாந்............
வண்டாயி பட்டு பட்டு தலைக்காயைக் கொட்டென்பார்
ஆருயிந்த துலுக்க ரெல்லாம் - சுத்தி வந்து
ஆத்தெரிமாக் கென்றுக்கு ..... ப்யிற்
கன்னடியர் பொந்திலியரும் -துளுவருங்
காருபாரு பண்ணி யெண்ண பாருபாரென்பார்

29. பண்டித மறாட்டியரும் - வைது யென்னை
பாஷைக்குள்ளே யென்னை பேசிக் கொள்வார்
கட்டி வைத்து அடியுமென்பார் - யிவனைக்
கன்னங்க......போட்டு கண்ணு கண்ணென்பார்
குடையில் கிடாவுமென்பார் - யிவனைக்
கொத்துக் குத்துத் தொழுவிலேத்து மென்பார்
திருடனைக் குத்தாருண்டோ - யிவனைச்
சென்னையி லரைந்தே....... கேதள்ளென்பார்
திருவுளச் செயலிதென்று - ஊமை கண்ட
தெரிசினம் போலல்லோ வாய் திறவாமல்
செங்கண்மால் வெண்ணை திருடி - உரலுடன்
சேர்த்துக் கட்டிக் கொண்ட .... ரை சாத்தி விட்டார்.

சங்கரனு மய்ய மெடுத்தான் - அரிச்சந்திரன்
அடிமைபட்டான் நீசனிடத்திலே தான்
ஆரைவிட்டது சனிய - னென்றுநா
நகித்துக் கொண்டேன் மனஞ்சகித்துக் கொண்டேன்

நேருடன் ராமுப்பதும் அவர் செய்த
நெருக்கத்தை யின்ன தென்றுரைக்கப் போமோ
சூரியன் உதித்தப் பின்பு - பாச்சா
சுபச்சமு ..... ருக்கும் சமயத்திலே
கட்டின கட்டுடனே பேச்சறியாக்
கன்னடிய ரென்னை யுய்ய...... ள்ளனார்.

30. மகன் அரமனைத் தேறி
தனைப்பிடித்த திருடனென்றார்
கோபாக்கினி மிகுந்து - யிவனைக்
கொண்டுபோய் ஒருகாலைத் துண்டியுமென்றார்
மாபாக்கிய மெனவே - உத்தாரம்
வாங்கிக் கொண்டேன் நின்றே பிடித்துக் கொண்டு
கோட்டைக்கு நேர்தெற்கே - கூட்டிட்போய்
தூர - நன்றெனவே கைமுத்லெல்லாம்
அவரவர் நாட்டமுடன் - பறித்
தோட்டம் கொண்டார் அன்று குலை களத்தில் வைத்தார்
கறிக்கோடு குறித்துக் கொண்டார் - ஒரு
காலைத் தரித்து விட்டார்

மலைப்புடன் களைதாக்கி - நான்
மயங்கினேன் கிடந் தேங்கினேன்
படிச்ச நிமித்திய குரு. விக்கரம்.....
பானையில் விழுந்த கதை போல்
லடுத்த பேர் வீட்டில் வந்த - விருந்
தப்பால் போவென்றால்ல.... து போமோ
மலைதனில் தேனுக்குத்தான் - முடவன்
வாய்தனை யாவென்ற வண்மை போலே
யிலகிய வெகுவாசை - வெகுநட்டம்
யெண்ணி யெண்ணிக் கொண்டு நானேங்கினேன்.

தனனா தன தனனா

விருத்தம்

31. வெய்யிலில் கிடந்த காலை
விதனத்தால் கோபமா......
.....ய்யவே அசந்த போது
பண்ணும் புல்வயலில் மேவுஞ்
செய்யதோர் ரகுமற்ற ....
......ம சாதித் துன்னை
உய்யமால் கார்ப்ப னென்று
உரைத்தனர் விழித்திட் டேனே

சிந்து

.......முமாச்சு பொடிச்சுட மணல் கொதிக்கவே
யெந்தன் - மனங் கொதிக்க நெத்த கவுட்சைக
ளுடன் வெகு நேரங்கிடந்தேன் நேரத்திலே
பத்த சிங்கி மகறாசன் - செஞ்சிக்கு
பயணமுத்தார்..... வெகுவயண முத்தேன்
மத்த கெசம் பரிசூழ - சேனையுடன்
வரும்போ தென்னைக் கண்டு திரும்பிநின்று

சி.... க்கி .... முற்று - நீரிருக்குந்
தேசமெங்கே உந்தன் வாகமெங்கே.
உந்தனுட சனங்களெங்கே - யென்று...
உண்டான தத்தினையும் விண்டே னைய்யா
பல்லாக்கில் தூக்கச் சொன்னா - ரவருட
பாளைய மிறங்கின .... யிலே
நல்லெண்ணை யெலுமிச்சங் - காய்கொண்டு

வந்துயிராப் பகல்ரெண்டு வேளைக் ....
... புடம் பண்ணிக் காயங்கள் மிகவுங் கட்டிப்புண்ணு
மாரிக்கருந் தழும்பான பின்பு – வரு...
வெண் முகப்புகளும்
நெடுந்தச்சன் அணிய பொய்க்காலுந் தந்தார்
பொய்க்காலைப் பூட்டி ... பத்திரசிங்கு

32. புண்ணிய வானெனக் கஞ்சு பொன்னுங் கொடுத்தான்
சிக்கான .... தான் தெற்கே போகவேணு மென்றேன்
மனங் கோணாமலே நல்ல தென்று –
அனுமதி தந்தார் – நானப்போ
றாமுறாமு செய்துக் கொண்டு நடந்தேனே.
சொல்லரிய கெடிங்தலமும் ...... களும்
துலைச்சேன் சீரங்கத்தில் வந்தேன்
காவேரி ஸ்நானம் பண்ணி – நான் செய்த
கற்மங் குளத்தனையுள்ள தெல்லாம் கடந்தேனே.
பூவேறி மணமகிழுங் குளத்தூறில்

புகுந்தேனே மனம் மகிழ்ந்தேனே
நாருத்தமலைக்கு வந்தேன் – மாரியம்மை
நறந்தலைவிரி சிங்கமது பூஞ்சுனையும்
சாரையில் வெண் சாரை.......
மாத்தறித்த முயலுடன் கருநெல்லியும்
நாதாக்கள் தவசு பண்ணுங் – குகைகளும்
கண்டு மகிழ்ந்தேன் வெகு ...... ங்குடனே
தாதாக்கள் போல் கொடுக்கும்..... புல்வயல்
தலத்தில் வந்தேன் நான் நிலத்திருந்தேன்
.... தண்ட துளைத்த பிறாந்தழைத்திடுங்

குன்றக்குடி மலையுங் கண்டே னைய்யா
வேதண்டந் துளைத்த பிறான்.........
........ஷர மெய்க்கதியும் வளமையும் விளங்குவதும்
குருபரத் தாசான் - சொன்ன தமிழ்க்

33. கம்பன் கூர்ந்த அதிக..........
வும் யிருவினை தவிர்ப்ப துவும்
அடியா வரீடேற அருள் செயு
மியல்புகளும் குட்ட முதல் சயரோகம்
...... பாணி கும்ம வலி - செவிடென
கூன் குருடும் வெட்டையுடன் பெரு வியாதியே வலும்
மெல்லா மொருங்...... கினையுமல்லாமல்
லேயெந்த வினை யிருந்தாலும் விலகியே யியல்புடன்
புத்திர பாக்கியமும் கொடுத்து சந்ததமும்
பெருவாழ்வு தருகின்ற சன்னதியெல்லா மறிந்து
உன்னிதமுடன் - வேலவரைப் போற்றிக் கால்வளர
வரம் பெறலாமென்று மன மகிழ்ந்து
குடியில் போய் .... ன் வியரை - கூட்டி வரக்
குலவு சித்தாண்டியை அழைத்தேனே.

தனனா தன தனனா

ஆனந்தக் களிப்பு

செங்காவி வெட்டித் தரித்துக் காதில்
செய மகர குண்டலமு நின்றே யிலங்க
மங்காத் திருநீறு பூசி நல்ல
வடிவேல் பிடித்து மயிலிறகு கொண்டு
அங்கான யிடையொட்டி யாணமும் பூட்டி
அழகான சித்தாண்டி யிதல்லோ வந்தாண்டி

வெற்றி விநாயகனைப் போற்றி நாளும்
விமலரொடு யிதமே மென்மேலும் போற்றி
சக்தி வடிவேலர்தனைப் போற்றி நித்தந்
தயவான வெள்ளி தெய்வானையைப் போற்றி

34. முத்தி தரும் மிடும் பேசனைப் போற்றி நாளு
முத்தமிழ்ச் சரசுவதியை நித்தமும் போற்றிச்
.... ச்சுனையில் வந்தாண்டி - அன்று
சண்முகம் பிள்ளையெனவே யுதித்தாண்டி
அரனுக்கு மைந்தனாக வந்தாண்டி
சமரில் அசுரர் கூறாகவே அயில் விடுத்தாண்டி
பரவுமிசை - யோர்க்குந் தாண்டி யிந்திர
பதவியழியாமலே பட்சம் வைத்தாண்டி
குறவள்ளி மணவானக் தாண்டி - புல......
குகனைக் கண்டாயோ நீ குலமான தோழி
சேவல் கொடியணிந்தாண்டி - அன்று
செங்கோல் நற்கீரனுக்கஞ்ச லென்றாண்டி

மூவர் தனனாக வந்தாண்டி - மலையை
மோதி வளைக்கவே ஓதி நின்றாண்டி
.... ரவலர்க்கன்பு செய்தாண்டி - கூவு
மயிலேறி வருகுன்றக் குமரேசர் தன்னைக்
கூட்டிவா மின்னே

வந்தகித் தாண்டி தன்னை
வளமையாய் நொண்டி பார்த்து
கொந்தள மனையா ...... தன்னைக்
கூட்டி வாவென்ற போது
சிந்தையில் மகிழ்ந்து தூது
சென்று தானூருக் கேக

சந்த தமான மோக
சவுந்தரி தோன்றி னாளே
மோக சவுந்த ரியிதோ
வந்தாள் - பாரைய்யா
சிங்கார மாகமோககவுந்தரி யிதோ வந்தாள்

35. முத்தமிழே சர்தன்னாட்டினில் ஆக - மகி... பையை போலே
அடிகோடு திஞ்ஞத் திமி திமி யெனவே - மோ-
கொண்டையில் மல்லிகைப்பூ சூட்டி - பெருக்
கெண்டை விழிக்கஞ்சனந் தீட்டி கெருவிதமாய்
கண்ட சரிவச்சிரம் பூட்டி - காலில்
சிலம்பு தண்டை கலீரென நயங்காட்டி
சங்கதியான பங்கயமால் தன்
செங்கையிலே வளைகுன்று துலங்க
அங்க கடுவளர் ரதியென்று கலங்க
கொங்கை யிரண்டு மிகுந்து.........

...........க யிறண்டு மிகுந்து குலுங்க ...... மோக
அஞ்சுகம் போலவே கொஞ்சி அமுந்தகுண
சஞ்சி..... சிறுவஞ்சி தரணிதனில்
தஞ்சமென் றிளைஞர் கண்டு கெஞ்சி தயங்கி வரும்
பஞ்சிலு மெல்லடி யஞ்சுகம் பொன்துகில்
தொய்ய மருங்கில் பளீர் பளீரென்ன
மெய்யிலா பரணங்களு மின்ன
...... ய்ய சவ்வாது கமகம யென்ன
செய்ய திலோத்தமை யிவளென்ன..... மோக
ஈசறுன........ ல்லாசா யென்னாளுங் கொண்ட
தேகமெல்லா நிறைந்த நேசர் தினந் துதித்து
பேசுந்தன....... கிறங்கிய வாசர் பெருத்த புகழ்

36. வீச குன்றக்குடி குமரேசர் விளங்கு நாட்டில்
தோடிக்கு..... புகன்றிசை பாடி
பெடை மானெனவே விளையாடிக் கூடிக்
களறியில் நாட்டிய நாடக மாடி ஆண்டியைத் தேடி ஏசல்
மோக சவுந்தரி யிதோ வந்தாள்.
என் மீதிலேனிந்த வன்மங்கள் செய்தாய் நொண்டி -
ஆர்க்கும்
தன் வினை தன்னை விடாதென்பது நிசம் நொண்டி-
துய்ய பதிங்காதம் போனாலும் பெண்ணே - உந்தன்
கைதனில் சூட்சக்கயறல்லவோ அடி பெண்ணே
கற்பின் யாகவே...... செய்வாயோ - நொண்டி யென்னைக்
...... காத்துக் கொள்வானடா நொண்டி
பொல்லாத வேளை வந்தா லென்ன செய்யலாம்
பெண்ணே யிப்பச்
சொல்லாதுஞ் சொல்லித் துயிலு முறிந்தாயோ கண்ணே -
வேசியுறவெல்லாம் காசுள்ள மட்டுமோ நொண்டி - சென்று
காசியில் போய்ச்சுரைக்காய்க் கறிக்காகுமோ நொண்டி
முன் செய்த .... கென் செயலாமடி பெண்ணே - சிவன்
தன் செயலல்லாது என் செயலாதுண்டோ கண்ணே

37. கண்மையுந் தீண்மையும் மையிலல்லவோ நொண்டி
- உந்தன்
கர்மம் விட் ..... திது மெய்யாச்சுதே நொண்டி
ஆரை வெறுத்தாலு மாவதுண்டோ அடிபெண்ணே
...... யிந்த.....
.... மூட உனை மூடிதானுண்டோ கண்ணே

வண்ணா துப்பைச் சதமென்று நம்பினாய் நொண்டி மாமா
மண்ணிலிருந்து பெண்ணேரஞ் செய்தாயே நொண்டி
வேல வறு மன்று வள.... ரதவே பெண்ணே - அந்த
வேங்கை மரமாகி நிற்கலையோ அடி கண்ணே

நாவியும் ...... கச் சொல்லாதே நொண்டி - யின்று
பாவமுளக்கு யென் பாவம் பலித்ததுதே நொண்டி
தேவ .... மலர்க் கொண்டணைத்தே புகழவாடி - உன்னை
ஆவலுடன் கூட கோவையிதழ்க் கனிதாடி
வேல்புகழ் குன்றக்குடி குமரேசர்தனை வேண்டி - எந்தன்
கால் வளர வரம் வாங்குவோம். வாடியென்றே

விருத்தம்

அருவையில் நொண்டிதானும் அவனுட மனையாள் கூட
இருவரும் மலையிலேறி .... லாடி , குருபரன்
மூர்த்தியான குமரர்தன் மகிமை யாலே
கருணை சேர்முன்பு போலே கால்வளந் ததுவே

விருத்தம்

38. வருஷமும் மூன்ற தாச்சு
வந்ததோர் சனியும் போச்சு
பெருமையாய்க் காலுங் கூடி
பின்னுந்தான் வளர லாச்சு
மருவையு மகவை யீய்ந்து
மைந்தனும் தானும் வாழ்ந்தார்
பெருக மிக்கதை கேட்டோர்
பேறு பெற்றோரே...

வாழிதானே மலர்மகளிது வாழி
மண்டலந் தழைக்க ...... ல்கிய மறையோர் வாழி
இன்ப செங்கோலும் வாழி உலகினில் மறையோர் வாழி
..... கந்து யெல்லவரும் வாழி குலவிய யிடும்பன் வாழி
குமரரும் வாழி தானே.

சரசுவதி துணை யுண்டாகவும்
திருச்சிற்றம்பலம்
குன்றக்குடி குமரன் நொண்டி நாடகம்.

முற்றிற்று.

* * *

பேச்சுவழக்கு சொற்கள் – அகரவரசை

அடவுடன் -21
கங்கணம் - 5
கயறு - 7
கள்ளி - 20
க்ளவாட -21
கறிசனமாய் - 21
கிச்சடி - 26
கிழட்டுமட்டை - 22
கூசாமல் - 26
கெம்பீரமாய் - 2,9
கெளுத்திமுள் - 18
கொலுசு - 20
சந்தோஷமாய் - 14
சணங்களெங்கே - 31
சனியனென்று -29
சிங்காரம் - 25
சிங்காரமாய் - 2
சும்மா - 21
சொகுசா - 10
சோத்திலும் - 19
தட்டுமுட்டும் - 10
தலைமண்டை - 18
தாய்க்கிழவி - 5,2
தாளபதுங்கி - 12
தாரற்றாளமாய் - 10
தேவடியா - 9
நன்றாச்சென - 14
பறங்கிகள் - 11
பரிற்றி காரம் - 10
பாதகத்தி -22
பிரமிச்சு - 9
புத்திர பாக்கியம் - 33
பொருக்காமல் - 20
மருமகன் - 3,22
மிச்சமானாள் - 22
முண்டை - 22
மூதேவி - 19
மூலையில் - 21
மோசங்கள் - 21
ரா (றா)த்திரியே - 19
வெங்கல தட்டுமுட்டு - 20
வேசி - 36

சொல்லடைவு (பாடல்எண்)

அ.

அக்கினி - 7
அச்சுதன்- 3
அத்தை - 15
அம்மா - 27
அம்மி - 19
அம்பிகையாள் - 3
அல்குல் - 16
அன்னம் - 23
அன்புடன் - 4
அகம் - 23
அசுரர் - 34
அடவு - 21
அடியவர் - 33,2
அடியார்கள் - 3
அதிசயம் - 9
அமரர் - 1
அரிசந்திரன் - 29
அருள் - 4
அலைகடல் - 22
அழகு - 35

ஆ.

ஆண்மை - 8
ஆந்தை - 18
ஆற்காடு - 24
ஆசுடையான் - 9
ஆசை - 24
ஆபரணங்கள்- 35
ஆவல் - 24

இ.

இந்திரகுலம் - 6
இன்பம் - 38
இயல்பும் - 33
இருட்டு - 27
இருநூறு - 14
இருபாதம் - 3

உ.

உத்தாரம் - 30
உடம்படி - 23
உடல் - 17
உடையான் - 11
உதைத் தெளிந்தாள் - 16
உரல் - 29
உலகு - 38
உறவு- 36

எ.

எழுபது - 17

ஒ.

ஒட்டியாணம் - 20

க.

கங்கணம் - 5
கச்சை - 5
கஞ்சி - 23
கட்டிப்புண்ணு - 31
கண்டார் - 8
கண்மை - 37
கத்தாழை - 18
கந்தன் - 3
கப்பல் - 19
கம்பன் - 32
கர்மம் - 23,37

கல்லுதொட்டி - 27
கல்லுமதம் - 19
கல்வி - 1
கள்ளிப்பால் - 18
கற்பூரதீபம் - 13
கன்னம் - 21
கன்னியர்கள் - 17
கஸ்தூரி - 19
கடன் - 23
கதுப்பு - 16
கயிறு - 27
கருணை - 1,37
கருத்து - 2
கலி - 3
கலியுகம் - 1
கவனம் - 14
களவு - 21
களரி - 36
கறிசனம் - 21
கனியிதழ் - 16
கனவு - 15

கா.

காப்புலியர் - 25
காசி -36
காடு - 7,19
காதல் - 8
காமப்பெருக்கம் - 17
காலம் - 14
காவேரி - 32
காளை - 7

கி.

கிச்சடி - 26

கீ.

கீர்த்தி - 4

கு.

குண்டலம் - 33
குத்தீட்டி -9
குத்துவலி - 22
குத்துவெட்டு - 26
கும்பினி - 11
குன்றக்குடி - 1,2,3,32,37
குகன் - 34
குடகுண்ணி - 28
குடப்பணம் - 21
குடுமியாமலை - 2
குடையுமுள்ளோன் - 4
குதிரை - 23
குதிரைகள் - 26
குதிரையோரம் - 27
குபேரக்குடி - 6
குமரர் - 1,37,38
குமரேசர் - 5,34
குமரன் - 1,2
குரங்கு - 23
குருகுலம் - 1
குருபரத்தாசான் - 32
குருவேர்வை - 16
குளத்தூர் - 32
குளம் - 7
குழி - 28
குழைகள் - 2

கூ.

கூச்சம் - 12
கூத்தாடி - 5

கெ.

கெம்பீரம் - 9
கெளுத்திமுள் - 18

கே.

கேட்டோர் - 38

கை.

கைப்பொருள் - 12
கைவசம் - 11

கொ.

கொங்கை - 35
கொட்டு - 28
கொண்டை - 10
கொம்பு தேன் - 19
கொள்ளை - 10,20
கொடியூறன் - 4

கோ.

கோட்டை - 10,24,30
கோத்திரம் - 7
கோர்வை - 10
கோதண்டர் - 2
கோவில் - 13,14

ச.

சக்கிலியர் - 27
சங்கீதம் - 15
சண்முகம் - 34
சத்து - 21
சந்தி - 23
சந்திரோதயம் - 15
சந்தோஷம் - 14
சந்திரகுலம் - 4
சன்னதி - 33
சடுதியில் - 27
சதி- 10
சதங்கை - 20
சறசாங்கள் - 16
சனி - 38
சனிபலன் - 5
சனியன் - 29
சனாங்கள் - 31

சா.

சாதி - 25

சி.

சிங்கன் - 4
சிங்காரம் - 2
சித்தப்பன் - 6
சித்தாண்டி - 33
சிந்தை - 15
சிலம்பு - 20
சிவந்திமுத்து - 13
சிவன் - 36

சூ.

சூரியன் -29

செ.

செங்கை - 17
செங்கோல் - 38
செஞ்சி - 31
செப்பம் - 12
செம்பொன் - 6
செவ்வந்திநாதர் - 12
சென்மம் - 8
செவி - 7

சே.

சேதுபதி - 11
சேவகன் - 7

சொ.

சொக்கேசர் - 9
சொகுசு - 10

சோ.

சோணாங்கி - 27
சோறு - 19

த.

தஞ்சம் - 2
தஞ்சாவூர் - 11
தண்டமிழ் - 2
தபலைவாசல் - 14
தயவு - 33
தரணி - 35
தலங்கள்- 9
தலைமண்டை - 18
தலையெழுத்து - 22
தலைப்பாகை - 25
தவம் - 4

தா.

தாழ்வாரம் - 21
தாபம் - 9
தாயகம் - 2
தாரா(றா)ளம் - 10

தி.

திண்மை - 37
தியாகராசர் - 2
திருகண்ணபுர(ற)ம்) - 12
திருடன் - 30
திருநீறு - 33
திருமோகம் - 14
திருவாஞ்சிபுரம் - 12
திருவாரூர் - 13
திருவெண்ணை நல்லூர் - 12
திருச்சினாப்பள்ளி - 12
திருட்டுகள் - 7

தீ.

தீவட்டி - 27

து.

துடைப்புண் - 23
துரை - 15

தூ.

தூக்கு - 11

தெ.

தெய்வம் - 1,3,5,9,23
தெய்வானை - 13
தெள்ளியவான் - 6,7
தெரிசனம் - 29
தெருக்கடை - 21

தே.

தேன் - 30
தேசம் - 7
தேவடியா - 9
தேவதைகள் - 3

தொ.

தொண்டைமான் - 11
தொந்தி விநாயகன் - 1
தொழில்கள் - 7

தோ.

தோகைமயில் - 3

ந.

நல்லெண்ணை - 31
நகமூணி -16
நடனம் - 13
நடையாள் - 24
நறம் - 24

நா.

நாட்டம் - 30
நாட்டுப்புலி - 6
நாள் - 8
நான்முகன் - 1
நாடகம் - 1
நாவி - 37

மோ.

மோகம் - 14

மோசங்கள் - 21

ய.

யெச்சியிலும் - 26

யீஞ்சலுடன் - 5

ர.

ரதியென்று -35

ல.

லீலை - 10

லீலையாடினாள் - 17

வ.

வட்டம் - 3

வந்துயிர் - 31

வன்மம் - 36

வரிசை - 15

வருத்தம் - 19

வருஷம் - 38

வலத்தோள் - 3

வளத்தி - 8

வளமை - 32

வளவு - 8

வனிதையர் - 5,15

வா.

வாய்ப்பு - 15

வி.

விண்ணாசை - 17

வித்தை - 7,16

விந்தை - 5,27

விசயறகுநாதன் - 4

விதி - 23

விநாயகன் - 33

விமலர் - 33

வியப்பு - 25

விரல் - 16

விருந்து - 15

விலை - 21

விழியணங்கு - 17

விழி - 31

விேனாதம் - 17

வீ.

வீச்சு - 12

வீடு - 18,22,25,30

வீரன் - 6

வீரியம் - 5

வெ.

வெண்ணை - 29

வெண்ணீறு - 2

வெட்டை - 33

வெய்யில் - 31

வெள்ளருகுவோ் - 18

வெள்ளையன் - 6

வெகுசனம் - 25

வெகுநட்டம் - 30

வெகுவாசை - 30

வெளிச்சம் - 28

வே.

வேங்கை - 37

வேதம் - 1

வேதியர்கள் - 8

வேளூர் சிதம்பரம் - 12

வேஷம் - 25

* * * *